[10th February 1955

Opening of new schools in the South Arcot district.

* 591 *Q.*—SRI A. RATNAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of requisitions received in 1954 by the Government from villagers to open new schools in their respective localities in the South Arcot district;

(*b*) the number of new schools scheduled to be opened in the South Arcot district in pursuance of the policy of the Government of India;

(*c*) of them how many schools have been actually opened so far; and

(*d*) how many villages with a population of above 1,000 are not yet provided with schools?

THE HON. SRI C. SUBRAMANIAM :—" (*a*) The information is not available.

" (*b*) 89 schools in the first instance and 147 schools subsequently.

" (*c*) All the schools out of the first quota have been opened; there is however no information regarding the number opened out of the 147 schools subsequently sanctioned.

" (*d*) Nil. I have to add that even in respect of the second batch, all schools except four schools have been opened. That is the information I have received yesterday when I was in South Arcot district."

SRI A. RATNAM :—" தென் ஆர்க்காடு மாவட்டத்தில் எத்தனை பள்ளிக்கூடங்கள் திறக்கப்படவேண்டுமென்று கலக்டருக்கு உத்திரவு போடப்பட்டிருக்கிறது ? ஏன் இன்னும் அந்தப் பள்ளிக்கூடங்கள் திறக்கப்படவில்லை ? தனிப்பட்டவர்கள் பிரத்தியேகமாக பள்ளிகளை நடத்தமுன் வந்தால் சர்க்கார் அவைகளுக்கு அங்கீகாரம் கொடுக்காததற்குக் காரணம் என்ன ? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" நான் கொடுத்த பதிலில் முதலிலே 89 பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டன, பிறகு 147 பள்ளிக்கூடங்களில் 143 பள்ளிக்கூடங்கள்தான் திறக்கப்பட்டன என்று சொன்னேன். இன்னும் திறக்கப்பட வேண்டியது நான்குப் பள்ளிகள்தான் பாக்கி இருக்கின்றன. ஆதலால் கனம் அங்கத்தினர் போட்ட கேள்விக்கு அவ்வளவு பொருத்தமான அர்த்தம் இல்லையென்று நான் சொல்ல விரும்புகிறேன்."

SRI A. GOVINDASWAMI NAYAGAR :—" 1,000 ஜனத் தொகைக்குமேற்பட்ட கிராமங்களில் பள்ளிகள் திறக்கப்படவேண்டுமென்று அரசாங்க உத்திரவு இருக்கும்போது, தென் ஆற்காடு ஜில்லாவில் 1,000 ஜனத் தொகைகொண்ட பல கிராமங்கள் இருக்கும்போது, குறிப்பாக என்னுடைய தொகுதியில் 12 பாடசாலைகள் இன்னும் திறக்கபடாததினால் அவைகளை உடனடியாக திறக்க கனம் மந்திரி அவர்கள் உத்திரவிடுவார்களா ? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" அந்த விஷயத்தைப் பற்றி அரசாங்கம் கவனித்து சீக்கிரம் உத்திரவிடும். "

SRI K. ARANGANATHAN:—" ஜில்லா போர்ட்டிலிருந்து ஒரு பாடசாலை திறக்கவேண்டும் என்று அரசாங்கத்திற்கு தாக்கீது வந்திருப்பதால், அதற்கு உடனடியாக அரசாங்கம் உத்திரவிட முன்வருமா ? "

10th February 1955]

THE HON. SRI C. SUBRAMANIAM :—“ ஜில்லா போர்ட்டு சர்க்காருக்கு தாக்கீது அனுப்பமுடியாது, விண்ணப்பம்தான் அனுப்ப முடியும். கிராமங்களில் பள்ளிக்கூடங்களைத் திறப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்துக்கொண்டிருக்கின்றன.”

SRI K. V. RAMASWAMI :—“ கிராமங்களில் 500-க்கு மேற்பட்ட ஜனத்தொகையிருந்தால் பள்ளிக்கூடம் ஆரம்பிக்க வேண்டுமென்று ஜில்லா போர்டு திட்டமிட்டுள்ளது. ஆனால் கல்வி அதிகாரி அதன்பிரகாரம் நடவடிக்கை எடுக்கவில்லை. 500-க்கு மேற்பட்டு ஜனத்தொகை இருந்தாலும், ஹேம்லட் ஆக இருந்தால் அங்கே திறப்பதில்லை. ஆதலால் சர்க்கார் அவைகளுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி உத்திரவிடுவார்களா ? ”

THE HON. SRI C. SUBRAMANIAM :—“ இவ்வளவு பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று ஏற்கெனவே சர்க்கார் எண்ணிக்கையை நிர்ணயித்திருப்பதால் அந்த எண்ணிக்கை அளவுக்கு இப்போது பள்ளிகள் திறக்கப்பட்டன. இன்னும் அதிகமாக திறப்பதைப்பற்றி சர்க்கார் ஆலோசித்துவருகிறது.”

SRI S. SWAYAMPRAKASAM :—“ கனம் மந்திரி அவர்கள் பதில் சொல்லுகிறகாலத்திலே மெம்பருடைய கேள்வி அர்த்தமில்லை என்று சொன்னார். ஆனால் அவரே இன்னும் 4 பள்ளிக்கூடங்கள் திறக்கவேண்டுமென்று ஒத்துக்கொண்டிருக்கிறார். அப்படியிருக்கும்போது கனம் மந்திரி அவர்கள் அவ்வளவு தூரம் நினைத்து பதில் சொன்னாரா என்பது எனக்கு சந்தேகமாக இருக்கிறது. கனம் மந்திரியினுடைய பதில் அவ்வளவு பொருத்தமாக இல்லையென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.”

THE HON. SRI C. SUBRAMANIAM :—“ நான் தமிழிலே பதில் சொன்னதினாலே அதை ஆட்சேபிக்கின்றார்கள் போலும்.”

MR. SPEAKER :—“ The hon. Member should have brought it to my notice then and there. I will have to look up the proceedings to see what exactly the Hon. Minister has said.”

THE HON. SRI C. SUBRAMANIAM :—“ If I had said in English that ‘ there is no meaning in it ’ it would have been quite parliamentary.”

SRI A. RATNAM :—“ என்னுடைய கடலூர் தொகுதியிலே தனிப்பட்டவர்களால் நடத்தப்படும் பாடசாலைகள் பல வருஷங்களாக நடத்தப்பட்டிருந்தும், அவைகளை இன்னும் என் அரசாங்கம் அங்கீகரிக்கவில்லை என்று முதலில் கேட்ட கேள்வி அர்த்தபுஷ்டியுடனிருந்தும் அதற்கு கனம் மந்திரி அவர்கள் சரியான பதில் அளிக்கவில்லாததற்குக் காரணம் என்ன ? ”

THE HON. SRI C. SUBRAMANIAM :—“ முதலில் போட்ட கேள்விக்கும் இப்பொழுது போடும் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. கனம் அங்கத்தினர் இதற்கு தனியாக கேள்வி கேட்டால் விடை அளிக்கிறேன்.”

I-A.—POINT OF ORDER *re* LANGUAGE THE MINISTER SHOULD REPLY IN.

SRI T. C. NARAYANAN NAMBIAR :—“ On a point of order, Sir. The Hon. the Minister for Finance who is also the Leader of the House was just now answering so many questions in Tamil. Some of us have not at all been able to understand what he has said. This is a very important matter dealing with single-teacher schools. Further, you, Mr. Speaker, gave a ruling on a certain point raised by hon. Member Sri S. Swayamprakasam. Most of us were not able to understand on what point the Hon. Speaker gave his ruling. We would like to know from the Chair whether the Tamil language has been adopted as the official language for conducting the proceedings in the Assembly.”